# அழகினை மறைத்தலும் மறைத்தலின் அழகும்

ஸஹ்ரா ரஹ்னவாத்

Alahinai Maraiththalum
Maraiththalin Alahum

Tamil Translation of
Beauty of Concealment
and
Concealment of Beauty
by Zahra Rahnavad

First Edition : 2005
No. of Pages : 96
Copy right : Publishers

Printed By : A.J. Prints, Station Road, Dehiwala.
Published By : Islamic Services Organization
118, Keels Housing Scheme
Enderamulla, Wattala.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | முகவுரை | 01 |
| 2. | நூலாசிரியர்பற்றி | 03 |
| 3. | மறைத்தலின் அழகும் அழகினை மறைத்தலும் | 07 |
| 4. | ஃபர்தா ஒழிப்பில் ஏகாதிபத்திய பின்னணி | 17 |
| 5. | ஒரு முஸ்லிம் பெண்ணிடமிருந்து பர்தாவின் தூது | 49 |

# 1. முகவுரை

ஃபர்தா தொடர்பான கருத்தரங்கு ஒன்றில் ஈரான் இஸ்லாமியக் குடியரசு பிரதமரின் மனைவியும் பேராசிரியையுமான சகோதரி ஸஹ்ரா ரஹ்னவாத் அவர்கள் நிகழ்த்திய உரை, அதன் முக்கியத்துவமும் கருத்தாழமும் கருதி புத்தக வடிவில் வெளிவருகிறது.

"ஃபர்தாவை ஒழிப்பதில் ஏகாதிபத்திய வழிமுறைகள்" "ஒரு முஸ்லிம் பெண்ணிடமிருந்து ஃபர்தாவின் தூது" ஆகிய இவரது தனித்தனியான ஆக்கங்கள் இங்கே ஒரே பார்வையில் உங்கள் முன் சமர்ப்பிக்கப்படுகின்றன.

தமிழ்பேசும் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் எமது நாட்டில் இத்தகைய படைப்புகள் அரிதாக உள்ள இவ்வேளையில் எமது முஸ்லிம் பெண்களுக்கு இத்தகைய ஆக்கங்கள் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்பது எமது நம்பிக்கை.

முழுக்க முழுக்க ஈரானிய மக்கள், குறிப்பாக பெண்கள் ஷாவின் ஆட்சிக்காலத்திலும் அதற்கு முன்னைய ஆட்சிகாலங்களிலும் அனுபவித்த இன்னல்கள் இங்கு ஆழமாக ஆராயப்பட்டுள்ளன.

மேற்கத்திய ஏகாதிபத்தியவாதிகளின் வருகையால் கிழக்கத்திய நாடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களும், கீழைத்தேசத்தில் உருவான பல்வேறு சிந்தனைகளால் தோன்றிய விளைவுகளும் இங்கே மிகவும் ஆழமாக உருக்கமான கண்ணோட்டத்தில் ஆராயப்பட்டுள்ளன.

ஈரானிய மக்கள் குறிப்பாகப் பெண்கள், ஏகாதிபத்தியவாதத்தினதும் மார்க்ஸிஸத்தினதும் கொடுமைகள் மூலம் அடைந்த இன்னல்களையும் அனுபவங்களையும் வைத்தே இந்த ஆய்வு நிகழ்த்தப்பட்டுள்ளது.

எமது மக்களும் இத்தகைய கொடிய பாதிப்புக்களில் இருந்து தப்பியவர்கள் என்று கூறமுடியாது. ஏதோ ஒருவகையில் நேரடியாகவோ மறைமுகமாகவோ நாமும் ஏகாதிபத்திய, மார்க்ஸிஸ வழிகேடுகளால் இன்றும்கூட தடம்புரண்டு கொண்டுதான் இருக்கின்றோம். ஃபர்தா என்பது ஓர் உடையும் அல்ல, ஒரு சீருடையும் அல்ல. மாறாக, அது ஒரு முஸ்லிம் பெண் இன்னொரு முஸ்லிம் பெண்ணுக்கும் அடக்குமுறை,

சுரண்டல் போன்ற கொடுங்கோன்மைக்கும் ஆளான உலக சமுதாய மக்களுக்கும் விடுக்கின்ற ஒரு தூது என்ற கருத்தை மிகவும் ஆழமாகவும் தெளிவாகவும் முன்வைக்கிறார் நூலாசிரியர்.

ஃபர்தாவின் தாத்பரியம் தெரியாமல் அணிபவர்களுக்கும் தெரிந்தோ தெரியாமலோ அதை அணியாமல் புறக்கணிப்பவர்களுக்கும் இது ஒரு விளக்கநூலாக அமையும்.

## 2. நூலாசிரியர் பற்றி

சகோதரி ஸஹ்ரா ரஹ்னவார்த் அமெரிக்க சார்பு ஷாவின் ஆட்சிகாலத்தில் இடம்பெற்ற ஆசிரியர்கள் வேலைநிறுத்தத்தின் மூலம் தனது அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பித்தார்.

அரசாங்க கல்வித்திணைகளத்தில் கடமையாற்றிய அவர் தனது அரசியல் நடவடிக்கைகளின் காரணமாக பதவிநீக்கம் செய்யப்பட்டார். இதனைத் தொடர்ந்து தலைமறைவாக வாழ ஆரம்பித்த இவர் புனைப்பெயரில் ஷாவின் அட்டூழியங்களுக்கு எதிராகத் தனது எழுத்தாற்றலைப் பயன்படுத்தினார். இந்தக்காலப்பகுதியில் அவர் பல நூல்களை எழுதினார். இவை ஒன்றில் இரகசியமாகப் பிரசுரிக்கப்பட்டன அல்லது அரசாங்கத்தின் கடுமையான தணிக்கை காரணமாக வெளிச்சத்துக்கு வராமலேயே போய்விட்டன.

"ஜோஸஃப்பின் குடியேற்றம்", "முஸாவின் கலகம்" குர்ஆனின் வரலாற்றுத்தத்துவத்தை விளக்கும். "குர்ஆனின் கண்ணோட்டத்திலிருந்து சமூக அந்தஸ்து" "குர்ஆன் பற்றிய ஓர் அரசியல் சமுகவியல் ஆய்வு" பலகுறுங்கதைகள் என்பன அவற்றுள் குறிப்பிடத்தக்கவையாகும்.

அடிக்கடி விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வந்த இவர் வெளிநாட்டுக்குத் தப்பிச்செல்வதில் வெற்றிகண்டார். வெளிநாட்டு மாணவர் மத்தியில் அவர் நிகழ்த்திய பல விரிவுரைகள் புத்தகவடிவில் தொகுக்கப்பட்டன. ஒரு "முஸ்லிம் பெண்ணிடமிருந்து ஃபர்தாவின் தூது" "ஒரு முஸ்லிம் பெண்ணின் எழுச்சி" ஆகியவை ஈரானுக்குள் கடத்திக் கொண்டுவரப்பட்டு பிரசுரிக்கப்பட்டன. ஷாவின் ஷைத்தானிய ஆட்சியின் கடைசிக் காலப்பகுதியில் இத்தகைய நடவடிக்கைகள் மீதான கெடுபிடிகள் தளர்ந்திருந்த வேளையில் அவர் மீண்டும் ஈரானுக்குத் திரும்பினார்.

ஈரானுக்குத் திரும்பிய இவர் இஸ்லாமியப் புரட்சிக்கு ஆதரவானவர் மீது அமெரிக்க ஆதரவு ஷாவின் ஷைத்தானிய படைகள் ஷஹ்ரிவார் (8ம் திகதி செப்டெம்பர் மாதம்) 17ம் நாள் நடத்திய பயங்கரப் படுகொலைகளைச்சாடி "ஷஹ்ரிவாரின் புயல்களும் பூக்களும்"என்ற தலைப்பில் "ஸைனப் பொரோஜெர்தி" எனும் புனைப்பெயரில் ஒரு கவிதைத் தொகுதியை வெளியிட்டார். அதை அவர் இமாம் கொமெய்னி அவர்களுக்கே சமர்ப்பணமும் செய்தார். இந்தப் புனைப்பெயரின்

உண்மையான நபர் யாரென்பதை அதிகாரிகள் தெரிந்துகொண்டதும் அவர் மீண்டும் தலைமறைவாக வாழ நிர்ப்பந்திக்கப்பட்டார்.

இஸ்லாமியப் புரட்சியின்போது பல நகரங்களிலும் பல்கலைக் கழகங்களிலும் அவர் விரிவுரைகளை நிகழ்த்தினார். இதன் மூலம் இஸ்லாமியப் புரட்சி இறுதி வெற்றி அடையும்வரை இவர் அன்றைய ஆட்சியாளர்களுக்கு ஒரு சிம்மசொப்பனமாகவே திகழ்ந்தார்.

இஸ்லாமியப் புரட்சிக்குப்பின் "ஃபர்தா ஒழிப்பின் ஏகாதிபத்திய வழிமுறைகள்" எனும் தலைப்பில் இவர் எழுதினார். பின் இவர் "ராஹ்-ஏ-ஸைனப்" (ஸைனப்பின் வழி) எனும் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் பதவியையும் ஏற்றார்.

கலாசாரப் புரட்சியின் கொந்தளிப்பான காலப்பகுதியில் இஸ்லாமிய வழிகாட்டுதலின்கீழ் நிறுவப்பட்ட மானுடவியல் பீடத்தில் கற்பிக்கும் கௌரவத்தைப் பெற்ற ஒரே பெண்மணி இவரே. அவர் தனது பல்கலைக்கழக நடவடிக்கையில் விரிவான கவனம் செலுத்தியதோடு தெஹ்ரான் பல்கலைக் கழகத்தில் போதிக்கவும் ஆரம்பித்தார். அங்கு அவர் "நுன்கலைகள்" "குர்ஆனிய வசனங்களின் ஆழமான கருத்துக்கள்" "இஸ்லாமியக் கலையின் தத்துவம்", "குர்ஆனிய கண்ணோட்டத்தில் ஒரு வீரன்" போன்ற பல படைப்புகளை உருவாக்கினார்.

நுண்கலைப்பீடத்தின் பட்டதாரியான சகோதரி ரஹ்னவார்த் அவர்கள் இப்போது பல்கலைக்கழகப் பேராசிரியையுமாவார். அரசியல் விஞ்ஞான பீடத்தில் தனது கலாநிதி பட்டத்துக்குரிய ஆய்வினை அவர் தற்போது முடித்துள்ளார். ஈரானிய இஸ்லாமியக் குடியரசின் முன்னாள் பிரதமர் மூஸவியின் மனைவியான இவர் மூன்று பிள்ளைகளின் தாயும் ஆவார்.

1986 ஏப்ரல் மாதம் 'ஷஹீத்-ஏ-பனோவன்' எனும் சஞ்சிகையில் வெளியான அவரது பேட்டியின் சுருக்கம் கீழே தரப்படுகின்றது.

கேள்வி: சகோதரி ரஹ்னவார்த் அவர்களே, திரு.மூஸவி அவர்கள் ஈரானியப் பிரதமராகப் பதவியேற்றதும் நீங்கள் ஏன் உங்களது சமூக நடவடிக்கைகளைக் குறைத்துக்கொண்டீர்கள்?

பதில்: அவர் இப்பாரிய பொறுப்பினை ஏற்றுக்கொண்டதும், அது வீட்டில் என்னுடைய பொறுப்புக்களைக் கூட்டிவிட்டது. அவர் அயராது பங்கெடுத்த உத்தியோகபூர்வ பொறுப்புக்களும், மக்களுக்கு அவர் ஆற்றவேண்டிய பணிகளும், வீட்டில் அவர் ஏற்கவேண்டிய பொறுப்புகளுக்கு உரியநேரத்தை வழங்கத்தவறிவிட்டன. எனவே கற்பித்தலிலும், எழுத்துத்துறையிலும் மட்டும் எனது சமூகப் பணிகளை மட்டுப்படுத்திக்கொண்டு, வீட்டுப்பணிகளில் கூடிய கவனம் செலுத்த வேண்டியதாயிற்று. இப்போது என்னுடைய பிள்ளைகள் வளர்ந்துவிட்டார்கள். எனவே நான் வீட்டில் இருக்கவேண்டிய அவசியம் இப்போது ஓரளவு குறைந்துள்ளது. சமூகப்பணிகளில் கூடிய நேரத்தை ஒதுக்கமுடியும் என நான் இப்போது நினைக்கிறேன். இறைவனின் அருளால் ''ஹிஸ்புல்லாஹ்''க்களுக்கு (அல்லாஹ்வின் கட்சியினருக்கு) எனது சேவைகளை எப்போதும்போல் வழங்க முடியும் என நான் நம்புகிறேன்.

கேள்வி: பிரதமர் அவர்கள் உங்களை சமூகசேவையில் ஈடுபட விடாது தடுப்பதாக சிலர் கூறுகிறார்களே!

பதில்: இல்லை, அப்படி இல்லை! அவை ஏற்றுக்கொள்ள முடியாத கருத்துக்கள். எல்லா முஸ்லிம்களையும் போலவே, மூஸவி அவர்களும் பெண்களின் மிக முக்கிய, கௌரமான பணி அவள் ஒரு தாய் ஸ்தானத்தில் ஆற்றக்கூடிய பணியே என நம்புகின்றார். ஆனால் அதேவேளை பெண்கள் சில சமூக நடவடிக்கைகளிலும் பங்கேற்க வேண்டும் என்ற கருத்தினையும் அவர் கொண்டுள்ளார். சமூகத்தின் சில அடிப்படைப் பொறுப்புக்களைப் பெண்கள் தமது தோளிலும் சுமக்கவேண்டும் என அவர் எண்ணுகின்றார். ஆகவே திரு. மூஸவி அவர்கள் தனது மனைவியின் சமூக சேவைகளுக்குத் தடையாக இருக்கின்றார் என்பது நியாயமான கூற்றல்ல.

நாங்கள் முதலாவதாக ஈரானிய இஸ்லாமியக் குடியரசின் தலைவருக்கும், இஸ்லாமியப் புரட்சிக்கு தமது வாழ்வைத் தியாகம் செய்த புத்திரர்களை உருவாக்கிய தாய்மாருக்கும் கடமைப்பட்டுள்ளோம். எல்லா முஸ்லிம்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெண்களின் பங்களிப்பு இதுவாகும். சமூகத்தில் பெண்கள், நானும்கூட பல்வேறு பொறுப்புக்களை ஏற்கவேண்டும் என்று எதிர்பார்ப்பவர்களில் மூஸவியும் ஒருவராவார்.

“பெண்ணின் மடியில் இருந்துதான் மனிதன் வானளாவ உயர்ந்து செல்கிறான்” என்று எமது தலைவரே கூறியுள்ளார்.

# 3. மறைத்தலின் அழகும் அழகினை மறைத்தலும்

ஹிஜாப்பற்றி விளக்கமளிப்பதற்காக 5.1.1986ல் ஈரானில் உள்ள ஃபர்ஹாங் மண்டபத்தில் ஒரு கருத்தரங்கு நடைப்பெற்றது. இதில் ஈரானிய பாராளுமன்ற உறுப்பினர் சிலரும், தெஹ்ரான் கல்வித்திணைக்கள உயரதிகாரிகளும் நிபுணர்களும் கலந்து கொண்டனர். கருத்தரங்கில் சகோதரி ஸஹ்ரா ரஹ்னவார்த் மறைத்தலின் அழகும் அழகினை மறைத்தலும் எனும் தலைப்பில் உரையாற்றினார். இதிலுள்ள ஒப்பற்ற கருத்துக்களையும் அழகிய அணுகுமுறையையும் பிரச்சினையின் ஆழமான தன்மையையும் கருத்திற்கொண்டு அவற்றை அப்படியே இங்கு பிரசுரிக்கின்றோம்.

ஹிஜாப் (அல்லது ஃபர்தா) என்பது ஓர் அழகிய இயற்கைக்காட்சி. மலர்கள் பூத்துக்குலுங்கும் ஓர் நந்தவனம். பல்வேறு நிற பழங்கள் நிறைந்த ஒரு தோட்டம். அங்குள்ள ஆயிரக்கணக்கான யன்னல்களைக் கொண்ட ஆயிரமாயிரம் அறைகளுள் எதை வேண்டுமானாலும் நீங்கள் தெரிவுசெய்யலாம். யன்னல்களினூடாக அந்தப்பழந்தோட்டத்தைப் பாருங்கள். கைகளை நீட்டி ஒரு பழத்தைப் பறியுங்கள். ஒரு தனிப்பழத்தைப் போல அத்தனை பழத்தையும் உங்களால் ஒரே நேரத்தில் பறித்துவிடலாம். அந்தப் பழரசத்தைக் கொண்டு உங்கள் இதயத்தையும், ஆத்மாவையும் அது திருப்திபடுத்திவிடலாம். அந்தப்பூந்தோட்டத்தை, ஃபர்தாவை குழம்பிப்போயுள்ள உங்கள் உள்ளத்துக்கு ஆறுதல் அளிக்கும் ஒன்றாக ஆக்குங்கள்.

அந்த நந்தவனத்தைக் கண்டுகளிக்கக் கூடிய அளவிடமுடியாத சாளரங்களில் அற்புதமான வர்ண ஜாலங்களை ஏற்படுத்தி உங்கள் ஆன்மாவை ஒளிமயமாக்கும் பல வண்ணக் கண்ணாடிகளாலும் சித்ரா (ஏழாம் வானிலுள்ள ஒரு மரம்) மரப்பலகையினாலும் உருவான மனித இனம் தோற்றம் பெற்ற நாள் முதற்கொண்டு மிகப்பழைய மனித வரலாற்றைக் கொண்ட அழகுமிக்க சாளரத்தினூடே அந்த ஹிஜாபை (ஃபர்தா) சற்றுநேரம் உற்று நோக்குவோம்.

அந்த நந்தவனமும் சாளரமும், மறைப்பும், அழகும் அடிக்கடி ஒன்றோடு ஒன்று இணைந்துகொள்வதற்காக நெருங்கிவருகின்றன. சில வேளைகளில் ஒன்றிலிருந்து ஒன்று பிரிந்தும் செல்கின்றன.

விளங்கிக்கொள்ள முடியாத மறைபொருளாக விளங்கும் எண்ணிலடங்கா சாளரங்கள் இந்த நந்தவனத்தின் முன்னால் திறந்திருக்கின்றன. அப்படியாயின் நா்ம் ஏன் ஹிஜாபை (மறைப்பை) அழகு என்ற கோணத்தினுடாக படிக்க வேண்டும்?

உதாரணத்துக்கு, நாம் ஹிஜாபை ஏகாதிபத்தியம் என்ற யன்னலினுடாக நோக்குவோம். இப்போது அதைப்பற்றி சற்று நிதானமாக அலசி ஆராய்வோம். எமது அன்புக்குரிய தாய்நாட்டின் கேந்திர முக்கியத்துவம் காரணமாகவும், அளவற்ற அதன் வளங்கள் காரணமாகவும் எமது தாய்த்திருநாடு மேற்கத்திய வல்லரசுகளின் தொடர்சியான ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி வந்துள்ளது. அரசியல்-பூகோளரீதியாக முக்கியத்துவம் பெற்றுள்ள இந்தப் பகுதியில் தமது நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்வதில் எப்போதுமே இவர்கள் அக்கறை கொண்டவர்களாக உள்ளனர். அத்தோடு சிக்கலான பல சதித்திட்டங்களைத் தீட்டி எமது இஸ்லாமிய தனித்துவத்தை அரித்துத் திண்பதிலும், எமது தேசத்தில் எஞ்சியுள்ள தற்காப்பு நடவடிக்கைகளை பலவீனப்படுத்துவதிலும் இவர்கள் முனைப்பாக உள்ளனர்.

ஐம்பது வருடங்களுக்கு முன் பிரித்தானிய, அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளின் ஆணைகளுக்கு அடிபணிந்த ரீஸாகான் ஈரானிலே பெண்கள் ஃபர்தா அணிவதைத் தடைசெய்தார். ஈரானின் கௌரவத்தினதும் சுதந்திரத்தினதும் சின்னமான தேசியக்கொடியைக்கூட அவர் கீழே இறக்கினார். இதுவே எதிர்காலத்தில் எமது தனித்துவத்தை இழக்கும் துக்ககரமான நாடகத்துக்கும் எமது நாட்டிலே வெளிநாட்டுக் கலாசார ஊடுறுவலுக்கும் காரணியாக அமைந்தது.

பொருளாதாரம் என்ற யன்னலினூடாகவும் நாம் ஹிஜாபை நோக்கலாம். மேலைத்தேய முதலாளித்துவ நாடுகளின் ஆடம்பர, அலங்கார உற்பத்திப் பொருட்களான தைத்த ஆடைகள், வாசனைத் திரவியங்கள், மேலும் அவர்களுடைய தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்ட இந்த தயாரிப்புக்களுக்கான பிரசாரசாதனமாக பெண்களின் உடம்புகளைக்கூட தருவிக்கும் ஏகாதிபத்தியவாதிகளின் சதித்திட்டத்தின் ஓர் அங்கமாகத்தான் ஃபர்தா ஒழிப்பு இருந்தது என்று நாம் விளக்கம் கூறலாம்.

ஃபர்தா ஒழிப்பை நாம் ஏகாதிபத்திய ஒழுக்கவியலின் கோணத்தினூடாகவும் நோக்கலாம். இங்கே பெண் என்பவள் இளைஞர்களின் பார்வைக்கு ஒரு அழகுப்பொருளாகவே காட்டப்படுகிறாள். இதன் மூலம் இளைஞர்களின் புலனுணர்வுகளையும் விவேகத்தையும் கவர்ந்து கொள்கின்றனர். இதன் தொடர்சியாக, இளைஞர்கள் தமது உணர்சிபூர்வமான சிந்தனைகளையும் உறுதியான தீர்வுகளையும் இழந்ததுடன் ஏகாதிபத்தியவாதிகள் நமது நாட்டின் இயற்கைச் செல்வங்கள் வளங்கள் என்பவற்றைச் சூறையாடவும் வழிவகுக்கப்பட்டது.

ஏகாதிபத்தியத்தின் கலாசார முக்கியத்துவத்தினூடாகவும் ஃபர்தா ஒழிப்பை நாம் நோக்கலாம். இங்கே மேலைத்தேய நாடுகளின் நாகரிகத்தினதும் கலாசாரத்தினதும் ஸ்திர நிலையாகவும் அவற்றுள் ஆதிக்கம் செலுத்துபவளாகவும் பெண் மிகைப்படுத்தப்படுகிறாள். இவற்றினூடாக எமது தேசிய, சமய நிலைகளை அழித்து எமது அதிஉயர் பெறுமானங்களான பக்தியுணர்வு, அன்பு, நல்லெண்ணம், நேர்மை, கௌரவம், தியாகம் ஆகியவற்றைப் பாழ்படுத்தி முழுமையான அழிவையும் ஏற்படுத்தி விட்டனர்.

இன்று எப்படியோ இந்த யன்னல்களுள் ஒன்றினூடாகவேனும் நாம் நோக்கப்போவதில்லை. அழகு மனோவியல் ரீதியான அதன் தோற்றத்திலும், ஃபர்தாவுடனான அதன் நேரடி உறவினாலும் பல மனிதர்களை மனோதத்துவ ரீதியாகவும் செயற்பட வைத்துள்ளது. இந்த மனிதர்கள் ஈரானிலாயினும் சரி அல்லது வேறு எங்கு இருப்பினும் சரி, இந்த மறைப்போடு (ஃபர்தா) தொடர்புடையவர்களாக அல்லது அதன் பரிமாணத்தோடு அல்லது வடிவோடு ஒத்த பிரச்சினைகளோடு தொடர்புடையவர்களாக உள்ளனர்.

இந்தப் பிரசங்கத்தை மேற்கொள்பவர் ஓர் அதிபராக, ஆசிரியையாக, அதிகாரியாக, ஊழியராக, வைத்தியராக, நிபுணத்துவம் பெற்றவளாக, இல்லத்தரசியாக, அல்லது பாடசாலை அல்லது ஒரு கல்லூரியின் மாணவியாக இருக்கும் ஓர் பெண் அல்ல. இன்னும் சொல்லப்போனால் இந்தப் பேச்சாளர்கள் இந்த நாட்டிலே பெண்களின் நிலைப்பாட்டினை உயர்த்துவதற்காக உண்மையாக உழைக்கும் எல்லாப் பெண்களினதும் பக்தி மிக்க ஆத்மாக்களாகும்.

இவர்கள் எல்லோரும் அதிஉன்னதமானவர்கள்; மென்மையான ஆத்மாக்களை உடையவர்கள். மேலும் இந்த பொருள் முதல்வாத உலகில் உண்மை என்ற பிரகாசத்தை அடையக்காத்திருப்பவர்கள்.

எமது முன்னைய ஆட்சியாளர்களோடு அரசியல் ரீதியாகத் தொடர்புடைய ஒரு சிறிய பெண்கள் குழு தனது சிந்தனை, செயல் என்பவற்றின் ஊடாக இன்னமும் மேலைத்தேய அரசியலிலும் பொருளாதார ஏகாதிபத்தியத்தோடும் தொடர்புடையதாக உள்ளதோடு, தனது வழிகாட்டுதல்களையும் பிரசார அறிவுறுத்தல்களையும் ஸீ.ஐ.ஏ., மொஸாட் ஆகிய குற்றச்செயல்களின் மத்திய நிலையங்களில் இருந்தும் வெளிநாட்டு வானொலிகள் மூலமாகவும் பெற்றுவருகின்றது. வேண்டுமென்றே, தெளிவான அறிவுடன் எமது இஸ்லாமிய சமூகத்தை நஞ்சூட்டுவதே இவர்களின் நோக்கமாக உள்ளது.

மிகவும் சிரமப்பட்டும்கூட மொத்தமாக எமது சமூகத்தில் ஒருசத வீதத்தைத்தான் இத்தகைய சக்திகளால் வகிக்க முடிகின்றது.

நாமெல்லோருமே ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் தேவையான பொருளாதார சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படுமானால், ஃபர்தாவோடு தொடர்புடைய விவகாரங்கள் உட்பட, வழிகேட்டினால் ஏற்பட்ட பெரும்பாலான கலாசார நட்டங்களையும், அதனோடு தொடர்புடைய இன்னும் பல குறைபாடுகளையும் சீராக்கிவிடலாம் என்ற உறுதியான நம்பிக்கை எனக்குண்டு.

அழகின் சட்டகத்துக்கு நாம் திரும்புவோம்.

இன்று ஃபர்தாவை முழுமையாக அமுல்படுத்தும் இளம் பெண்களும், அதனால் முழுமையாக வசீகரிக்கப்பட்டவர்களும் முழுமையாக மறைக்கப்படுவதில்தான் அழகு இருக்கின்றது என்ற உண்மையை உணர்ந்துள்ளனர். இந்த அழகு எப்படிப்பட்டது?

மறுமுனையில் ஃபர்தாவை அரைகுறை மனதோடு ஏற்றுக் கொண்டவர்களும், கட்டாயத்தின் அடிப்படையில் அதனை பொறுத்துக்கொண்டு இருப்பவர்களும், தூய்மையான களங்கமற்ற வடிவங்களைக் கொண்டிருப்பதற்கு மாறாக அவர்களுடைய அழகை எண்ணற்ற வடிவங்களாலும் வர்ணஜாலங்களாலும் வாசனைகளாலும்

மறைக்க முற்படுகிறவர்கள் தங்களின் அழகின் தரத்தை ஃபர்தா குறைத்துவிடுகின்றது என்று கருதுகின்றனர். அழகு என்பதற்கு இவர்கள் கூறும் இந்த அபூர்வமான கருத்துத்தான் என்ன?

அழகு என்றால் என்ன? அதன் ராஜ்ஜியம் எங்கே இருக்கின்றது.?

ஆனால்.....அன்புக்குரிய பெண்களே, சமூகத்தின் தன்மைகள் விசித்திரமானவை. சமூகமே மறைவானதுதான். அந்த மறைவு எத்தகையது? நீங்கள் வாழும் சமூகத்திலே உங்களுடைய சூழலிலே நீங்கள் எண்ணிலடங்காத் திரைகளைக் காணலாம். இவை உங்கள் அழகை ஆகர்ஷிப்பனவாக இருக்கின்றன. நீங்கள் ஏன் இந்தத்திரைகளைப் பார்க்கக்கூடாது? நீங்கள் யார்?

இந்த சமூகத்தில், சமூகத்தின் தீர்ப்புகளுக்கேற்ப நீங்கள் உங்களை மாற்றிக்கொண்டுள்ளீர்கள். நீங்கள் வேலை செய்யும் சூழலில் உள்ள நடத்தையை ஏற்றுக்கொண்டுள்ளீர்கள். அந்தச் சூழலில் மறைந்திருப்பதற்குரிய நிபந்தனைகளை நீங்கள் ஏற்றுக் கொண்டுள்ளீர்கள்.

உங்களுடைய வாழ்நாள் முழுவதும் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு நிமிடமும், ஒவ்வொரு சம்பவத்திலும் உங்களுடைய குறிப்பிடத்தக்க தோற்றத்தின் மீது புதிய திரை இடப்படுகின்றது. வர்க்கரீதியான திரை, வடிவுரீதியான திரை, அந்தஸ்து ரீதியான திரை, உங்களுடைய கீர்த்தி மீதான திரை, கௌரவத்தின் மீதான திரை, இப்படி எத்தனையோ திரைகள்! ஆனால் உண்மையிலேயே நீங்கள் யார்? என்ன செய்து கொண்டு இருக்கின்றீர்கள்? இந்த எண்ணற்ற திரைகள் உங்களுடைய சொந்த நிலையை, தனித்துவத்தை இழக்கச் செய்கின்றனவே!

மார்க்ஸிஸத்தைப் பொறுத்த மட்டில் மனிதனுடைய தனித்துவம் அவன் சார்ந்துள்ள பொருளாதார வர்க்கத்தைக் கொண்டே நிர்ணயம் செய்யப்படுகின்றது. ஆனால் நாங்கள் மார்க்ஸிஸவாதிகள் அல்ல இதனை நம்புவதற்கு. இதற்கு மாறாக ஒவ்வொரு மனிதனிலும் ஏதோ ஒன்று யதார்த்தத்தில் இருப்பதாக நாம் நம்புகின்றோம். அது சமூகரீதியாக, வரலாற்றில், வகுப்பில், உறவுமுறையில், தொடர்புமுறையில், அவனுக்கு வழங்கப்பட்டவற்றை விட மகத்தானதாகும். ஃபர்தாவோடு தொடர்புடையதாக எடுத்துக்கூறி ஸ்தாபிக்கப்பட்டுள்ள சுய-பராதீனம் என்ற விடயம் வேறு

பல கொள்கைகளிலும் முன்உதாரணமாகக் காட்டப்பட்டுள்ளது. உதாரணமாக கைத்தொழிழ் சமூக அமைப்பிலான ஒரு முதலாளித்துவ தயாரிப்பு, இலாபத்தை நோக்கி, தொழிலாளிகளிடையே சுயமித்திர பேதத்தை ஏற்படுத்துவதாக மார்க்ஸிஸவாதிகள் நம்புகின்றனர். பொருளாதார பரிபாஷையில் இது சுயபராதீனமாக விளக்கப்படுகின்றது.

எல்லா அறிவும் மனத்திலிருந்து தான் பிறக்கிறது என்றும், மனத்தின் புறத்திற்கும் அகத்திற்கும் வேறுபாடு இல்லையென்றும் கூறும் ஒரு வகை தத்துவம் சுயபராதீனத்தை வித்தியாசமான ஒரு முறையில் விளக்குகின்றது. இதன்படி மனிதன் என்பவன் வெறுமனே தன்னிச்சையாக இருப்பவன், அவனுடைய உணர்வுகள் மந்தமானவையாகையால், உணர்வற்ற உலகிலும், சமூகத்திலும் செயற்பாடுகளும் சம்பிரதாயங்களும் அவனுடைய மனோநிலைக்கு முற்றிலும் அந்நியமானவையாக உள்ளது. இது சுயபேதத்தை அவனிடயே பிரசவிக்கின்றது.

இதுவரை உங்கள் முன் சமர்ப்பித்து விளங்கப்படுத்திய குறிப்பின்படி ஒரு பெண் ஏனைய எல்லா முறைகளிலும் என்ன நிபந்தனையிலாயினும் சரி, சூழலிலாயினும் சரி, தன்னுடைய உண்மையான பல்வேறு உறவுகளிலும், தொடர்புகளிலுமான திரைகளில் சுற்றி மூடியவளாகவே காணப்படுகிறாள். எமது தாத்பரியத்தின்படி இஸ்லாமிய ஃபர்தா என்பது இந்த எல்லாத்திரைகளையும் அப்பால் வைத்து விட்டு அவளுடைய உண்மையான அழகை ஒருங்கிணைத்து உண்மையான அழகின் நிலையையும், சுயநிலையையும், மீண்டும் தெரிந்துகொள்ளும் சாத்தியத்தை அவளுக்கு வழங்குகின்றது. இந்த சமூக அமைதி என்பது அவளுடைய சுயநிலைக்கும், இன உறவுக்கும், நேர்மைக்கும் அறிமுகமாகிறது. இது இறைவனை அடைந்து கொள்ளும் அவளது முயற்சிக்கும் உறுதுணையாகிறது. இதுவே ஞானக் கோட்பாட்டின் ஒருமையாகும்.

மனிதன் வெறுமனே பொருளாதார, வரலாற்று இயல்புகளைக் கொண்டவன் அல்ல. இவை பரிசுத்தமான, தெளிவான அழகுக்கு மேலால் இடப்பட்டுள்ள வெறும் திரைகளே. இவை ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணையப்பட்ட திரைகளாகும். சமூக அந்தஸ்துகள் எல்லாமே மனிதப் பண்புகளின் உண்மை அழகின்மீது இடப்பட்ட வெறும் திரைகளேயாகும். உங்களினுள்ளே உள்ள ஒன்று, நீங்கள் அதனைக்கண்டுபிடிப்பீர்கள்; அதற்கு உண்மையாய்யிருப்பீர்கள்; அதன் பாதுகாப்புக்கு உடன் வருவீர்கள்;

அதனுடன் இசைந்திருப்பீர்கள், அதனுடன் எல்லா வகையிலும் ஒன்றாகி விடுவீர்கள், அது உங்களைத் தாங்கியிருப்பதோடு நீங்களும் அதனைத்தாங்கியிருக்கிறீர்கள் என்றெல்லாம் மிக ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறது. அப்போது தான் உங்களது ஆரம்ப மூலத்துக்கு நீங்கள் திரும்பிச் செல்லலாம். ஆனால் எண்ணற்ற திரைகளின் மூலமாக உங்களுக்கும் அதற்கும் இடையேயான தூரத்தை நீங்கள் அதிகமாக்கிவிட்டீர்கள். அதில் இருந்து முழுமையாக நீங்கள் பிரிக்கப்பட்டுவிட்டீர்கள். அதனைத் தனிமையாக்கி விட்டீர்கள். ஆம்! மொத்தத்தில் நீங்கள் அதனை நலுவவிட்டுவிட்டீர்கள்.

முழுமையான அழகின் மறைவிடமும் இங்கேதான் இருக்கின்றது. அதனை நீங்கள் சொந்தமாக்கிக் கொண்டதும் போலியான தனித்துவங்கள் யாவும் உங்களை விட்டு அகன்றுவிடும். உங்களுடைய இகலோக அந்தஸ்து, உலகாயத இருப்புக்கள் எல்லாமே மறைந்து விடும். நீங்கள் உங்கள் தனிப்பட்ட நிலையின் அடையாளத்தைக் கைவிட்டு, என்னைப் போல, அவரைப் போல, இன்னும் பலரைப்போல ஒரு தொழிலாளியாக, அதிகாரியாக, ஆசிரியனாக, வைத்தியனாக, மாணவனாக மாறிவிடுவீர்கள்.

நீங்கள் உங்களுடைய வீண் ஜம்பங்களைக் கைவிட்டு, பேதத்துக்குள்ளான உங்களுடைய உண்மையான சுயநிலையை அடைந்து கொள்வீர்கள். அந்த சுயநிலை கம்பீரமான, அழகான ஆரம்பத்தை, தெய்வீக ஆரம்பத்தை, இறைவனின் தெய்வீக வெளிப்பாடடைக் கொண்டது. ஆம்! இறைவனே அழகானவன்.

இன்னொரு வார்த்தையில் சொல்வதாயின், இப்போது நீங்கள் சமூக நிலையில் ஒற்றுமையை அடைந்துவிட்டீர்கள். நீங்கள் வாழும் நிலையிலும் நீங்கள் ஒற்றுமையை அடைந்து விடலாம். ஒரு மரத்தின் இலையின் வாழ்வைப்போல,ஒரு மலையைப் போல அல்லது சுழன்றடிக்கும் காற்றில் ஒரு மலரைப்போல அல்லது ஒரு பறவையைப்போல வாழ்ந்துகொண்டிருக்கின்ற இணையற்ற ஒரு சமூகத்தில் நீங்கள் காலடி எடுத்து வைக்கிறீர்கள். அங்கே எல்லாமே அவன் கட்டளைக்கு இசைந்தனவாக அவனை வழிபட்டுக்கொண்டு இருக்கின்றன. இத்தகைய மறைவல்லவோ உண்மையான அழகு! இவ்வளவு நாளாக நீங்கள் எதன் பின்னால் ஓடித் திரிந்தீர்களோ அதைவிட அழகானதல்லவா இது! உங்களுக்கு அழகான தோற்றத்தை தரவேண்டும் என்பதற்காக

வர்ணங்களைக் கொண்டு நீங்களே அலங்கரித்துக்கொண்டவை உங்களை, உங்களுக்குள்ளே உங்களது தனித்துவத்துக்குள்ளே அதற்குள்ளே மூழ்கச் செய்து விட்டன. உங்களை உண்மையான அழகில் இருந்து அப்பால் இழுத்துச்சென்று, உங்களுக்கும் உண்மை அழகுக்கும் இடையே ஒரு திரையாக இருப்பதை நிரூபித்துவிட்டது.

ஒருபுறத்தில் மனித உடலின் பௌதீக அழகு, பார்வைக்குத் தெரியக்கூடிய அழகு, வெளித்தோற்றத்தில் உள்ள கவர்ச்சி என்பனவே தடைகளாகும். ஆம், ஒரு கவிஞன் கூறுவது போல உண்மை அழகுக்கு மனித உடலே ஒரு திரைதான்.

*என் உடலின் தூசு என் ஆன்மாவின்*

*முகத்துக்கொரு தடையாகி வருகிறது*

*முகத்திலிருந்து அத்திரையை நீக்கிவிட்டால்*

*அந்தக்கனம் எத்துனை ஆனந்தமானது !*

மேற்கத்திய மறுமலர்ச்சி என்பது உடம்புக்கும் பொருளுக்கும் அதிக முக்கியத்துவத்தைக் கொடுக்கும் கிரேக்க பெறுமானங்களின் எழுச்சியாகும். அவர்களுடைய நம்பிக்கையின்படி அழகு என்பது தூய்மையானதாகும். ஆகக் கூடுதலான அழகுள்ளவரே மிகத்தூய்மையாளரும் பிரபல்யமானவரும் ஆவார்.

காதலுக்கும் அன்புக்கும் உரிய பெண்தெய்வம் வீனஸ். தங்கம், வெள்ளி என்பவற்றை நிறைபோடுவதற்கான உபதேவதை ஹெலன். இவர்கள் இருவரும் தேவதைகளாக இருந்த அதேவேளை மோசடிகளின் நாயகிகளாகவும் திகழ்ந்தனர். தீய ஒழுக்கம், நம்பிக்கைமோசடி என்பவற்றிலும் தேர்ச்சியுடையவர்களாக இருந்தனர். கிரேக்க நாகரிகத்தின் கிளைகளில் இருந்து தமது பெறுமானங்களைப் பெற்றுக்கொண்ட மேற்குலக ஏகாதிபத்தியவாத மக்கள் இவர்களை வணங்குவதுதான் விந்தையானது.

பௌதீக அழகே தூய்மைகளின் அடித்தளம் என்பதை நிரூபிப்பதற்கு இந்த மக்கள் எல்லா இடங்களிலும், குறிப்பாக அவர்களுடைய காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மிகவும் கஷ்டப்பட்டு முயற்சிசெய்து வருகின்றனர். இவர்களுடைய கருத்துப்படி தூய்மையும்

அழகும் குடிகொண்டிருப்பது உடம்பில்தான். அப்படியென்றால் அது பொதுமக்களின் பார்வைக்கும் தீர்ப்புக்கும் அம்பலப்படுத்தப்படல் வேண்டும்.

ஏகாதிபத்திய ஆட்சிகளில் பெண் என்று சொன்ன உடனேயே அது வெறும் அழகான ஒன்று மாத்திரமே என்ற கற்பனையை தோற்றம் பெறுகின்றது. இந்த ஏகாதிபத்திய கலாசார பாதிப்பினால் அந்த சமூகமே இன்று வேதனையடைந்து வருகின்றது.

மாறாக, பெண் என்பவள் பல வீர மகாகாவியங்களினதும், இதிகாசங்களினதும், மூலப்பொருள், தியாகத்தின் அடையாளச் சின்னம் என்ற உண்மையான, நியாயமான சிந்தனைகள் அங்கே தோற்றம் பெற மறுக்கின்றன.

எமது சமூகத்தில் இத்தகைய மகத்தான சிந்தனைகளையும் பெறுமானங்களையும் பிரசவிக்கச் செய்தமைக்காக இந்தச் சந்தர்ப்பத்தில் இறைவனுக்கு நாம் நன்றி கூறவேண்டும். வேறு இடங்களில் பௌதீக அழகு நிலையானது என்ற கருத்து மிகவும் வலுவடைந்துள்ளது. பெண் என்பவள் அந்தக்கருத்தினால் ஆளப்படுபவளாகவும் இருக்கின்றாள்.

அது மட்டுமன்றி தான் அழகாக இருப்பதில் மட்டுமே திருப்தி அடைபவளாகவும், தன்னுடைய அழகு பொதுமக்களின் தீர்ப்புக்குரிய ஒன்று என்பதைக் கண்டு கொள்வதில் திருப்தி அடைபவளாகவும் இருக்கின்றாள்.

பெண்ணைப்பற்றிய, அழகான பெண்ணைப் பற்றிய இந்தக்கற்பனை ஆண்களுடைய சிந்தனையிலும் நிலையான ஒரு பெறுமானத்தை ஸ்தாபித்துக் கொள்கின்றது. எந்தளவுக்கு என்றால்,அவன் தன்னுடைய வாழ்க்கையில் திருமணம் போன்ற முக்கியமான நிகழ்சிகளில் முடிவெடுக்கும் போதும் இந்த பௌதீக தராதரத்தையே நாடி நிற்கின்றான்.

ஒரு சமூகத்துக்கு ஒரு பெண்ணிடம் இருந்து தேவைப்படுவது,ஒரு பெண்ணுக்கு தன்னிடம் தேவைப்படுவது, ஓர் ஆணுக்கு ஒரு பெண்ணிடம் இருந்து தேவைப்படுவது எல்லாமே பௌதீக அழகைச்சுற்றிப் பின்னப்பட்டதாகவே உள்ளது.

ஓர் ஆண் பெண்ணிடம் எதிர்பார்ப்பதும் ஒரு பெண் தன்னிடமே எதிர்பார்ப்பதும் பரிசுத்த ஆன்மாவாகவும் மனிதபண்புகளாகவும் திறமைகளாகவும் தராதரங்களாகவும் எந்தக் கணத்தில் மாறுகின்றனவோ அப்போதுதான் உண்மையான அழகை நாம் காணமுடியும்.

அழகுக்காக ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட இந்த உடம்பு, தூசு துகள்களோடு இரண்டறக்கலந்து பூச்சிகளை உற்பத்தி செய்யக்கூடியதும், பூச்சிகளினால் அரிக்கக் கூடியதுமான இந்த உடம்பு உண்மையான அழகை அடைந்து கொள்ளும் பாதையில் உள்ள ஒரு தடையேயன்றி வேறில்லை.

ஆகவேமறைவான அழகு என்பது அழகுக்கு கொடுக்கப்படுகின்ற பௌதீகப் பெறுமானங்களை அழித்து, ஒழித்து விடுவதிலேயே தங்கியுள்ளது.

இதன்மூலம் ஆண்களையும் பெண்களையும் கொண்ட இந்த சமூகத்தின் சிந்தனையில் பெண்ணின் உண்மையான பெறுமானங்களையும், அவளுடைய உண்மையான நிலையையும் மீண்டும் தோற்றம் பெறச் செய்ய முடியும்.

# 4. ஃபர்தா ஒழிப்பில் ஏகாதிபத்திய பின்னணி

*பெண்ணின் மடியில் இருந்து தான் மனிதன் வானளாவ உயருகிறான்.*

*இமாம் கொமெய்னி*

ஈரான் இஸ்லாமியப் புரட்சியை அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான அரசியல் புரட்சி என்றோ அல்லது பொருளாதாரத்தோடும் வர்க்க முரண்பாடுகளோடும் தொடர்புடைய ஒரு பொருளாதாரப் புரட்சி என்றோ கூறுவதைவிட ஒவ்வொரு தனிமனிதனிலும் சமூகத்திலும் ஈரானிய முஸ்லிம் சமூகத்தின் வீரர்களினதும் மனத்தின் ஆழத்தில் புதையுண்டு கிடந்த ஒழுக்கவியல் ஆன்மீகப் பெறுமானங்களை வெளிக்கொணர்ந்த ஒரு கலாசாரப் புரட்சி என்று கூறுவதே பொருத்தமானதாகும்.

இது அல்லாஹ் தனது மலக்குகள் மூலமாக எமக்களித்த ஓர் அருட்கொடை. எமது சமூகத்தின் இமாமின் மூலமாக ஒடுக்கப்பட்ட எமது நிலத்தின்மீது மறைவான தெய்வீகப் பொக்கிஷங்களில் இருந்து பொழியப்பட்ட அருட்கொடை. அதிகார மோகத்திலும் பதவிமோகத்திலும் இரண்டறக் கலந்திருந்த ஆன்மாக்களில் இருந்து எமது பூமியை கழுவி சுத்தப்படுத்திய அருட்கொடை. செல்வத்தைக் குவிக்கும் பேராசையில் இருந்தும் அழகை ஆராதனை செய்வதில் இருந்தும் மேற்கத்தியவாதிகளிடமிருந்தும் கிழக்கத்தியவாதிகளிடமிருந்தும் விடுதலை பெற்றுத்தந்த அருட்கொடை.

பெண்களோடு தொடர்புபட்ட விடயத்திலும்கூட சமூகத்தின் ஏனைய பகுதிகளோடு இருந்த தொடர்பினைப் போலவே பல புதிய பெறுமானங்களைத் தோற்றுவித்தது.

இந்தப் பெறுமானங்கள் மனிதனின் இயற்கையான தன்மைகளுள் ஏற்கனவே செம்மையாகப் பதியப் பெற்றவை. இருந்தாலும் எமது மண்ணில் கடந்த 2500 வருட காலங்களாக நீடித்த கொடுங்கோல் ஆட்சியின் விளைவினால் ஏற்பட்ட ஆசாரங்கள், பழக்க வழக்கங்கள், பகிரங்க அவமானங்கள் போன்றவற்றினாலும் இந்தப் பெறுமானங்கள் மறைக்கப்பட்டிருந்தன.

ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் காலப்பகுதி முழுவதிலுமே ஏனைய எல்லா முஸ்லிம்களும் இத்தகைய நிலையை அனுபவித்து வந்தனர்.

ஆனால் இன்று தெய்வீகப் பிரார்த்தனையின் காரணமாகவும் அனுகூலமான ஓர் உந்துதலின் காரணமாகவும் பெண் தன்னுடைய அற்புதங்களைப் புரிந்துகொண்டதோடு அவள் வெறுமனே உடம்பையும் தன்னுடைய பெண்மையையும் கொண்டு வாழ்பவள் அல்ல என்பதையும் உணர்ந்து கொண்டாள்.

ஆனால் அதற்கு முதற்படியாக தெய்வீக நிலைப்பாடுகளையும் ஈடுபாடுட்டினையும் உயர்த்திக்கொள்ளவேண்டியது அவசியமாகிறது. அப்போதுதான் இறைவனால் வாக்களிக்கப்பட்டவாறு தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும் தெய்வீக மூலத்தின் அதிஉயர்வான அந்தஸ்தினைப் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

*''அதை (ஆத்மாவை) பரிசுத்தமாக்கியவர் திடமாக வெற்றியடைந்தார்.''*

*(அல்குர்ஆன் சூராஷம்ஸ் 91:9)*

பெண் என்பவள் வெறுமனே " அழகான பாலுணர்வுமிக்க ஒரு வஸ்து" அல்ல என்றும் தெய்வீகப் பண்புகள் உள்ளவள் என்றும் எமது சமூகத்தின் ஆண் வர்க்கம்கூட தற்போது உணர்ந்துள்ளது.

இதனைத்தான் இமாம் கொமெய்னி அவர்கள் மிகவும் நாசூக்காக "பெண்ணின் மடியில் இருந்துதான் மனிதன் வானளாவ உயருகிறான்" எனக் கூறியுள்ளார்கள்.

சந்தோஷத்தின் மூலப்பொருள் நீயே! வல்லரசுகளாலும் அரசர்களாலும் இலட்சியக் குழுக்களாலும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு பாவிக்கப்படும் ஏணிப்படியும் நீயே! பல்தேசியக் கம்பனிகளின் நம்பிக்கைக்கு உரியவளும் நீயே! இவ்வாறு எல்லாம் போற்றப்பட்ட பெண்,

விவேகத்தின் குறைபாடாகவும் மடத்தனத்தின் சின்னமாகவும் சதியாலோசனைகளினதும் தகாத நடத்தையினதும் பிறப்பிடமாகவும் கருதப்பட்ட பெண்,

யாருடைய மார்புகள் மனிதத் தன்மைகள் மீதும் மனிதப் பெறுமானங்கள் மீதும் வெட்கக் கேட்டினையும் அவமானத்தையும் ஏற்படுத்தும் எனக் கருதப்பட்டதோ அந்தப் பெண்,

திடீரென இன்று மனிதனுடைய மகிமையின் கோபுரமாகவும் மனிதப் பெருந்தன்மையின் உச்சிக்கு அவனைக் கொண்டுசெல்லும் ஏணியாகவும் நோக்கப்படுகிறாள்.

எவ்வாறாயினும் சரி பெரும் இன்னல்களை அனுபவித்த பின்னரே பெண்கள் இன்று இந்த நிலைக்கு உயர்ந்துள்ளனர். கடுமையான சோதனைகளுக்கு பின்பே அவர்களால் இந்த கௌரவத்தையும் பெறுமதியையும் அடைய முடிந்தது.

இஸ்லாமிய புரட்சியின் உச்ச கட்டத்தில் இஸ்லாத்தைப் பாதுகாக்கும் பணியில் தங்களது பேரன்புக்குரிய கணவன்மாரையும் புத்திர செல்வங்களையும் தியாகம் செய்த பின்பே இந்தத் தராதரத்தை பெண்களால் அடையமுடிந்தது.

சீ.ஐ.ஏ., மொஸாட் ஆகிய படுகொலை ஏஜண்டுகளின் சித்திரவதை நிலையங்களில் உயிர்நீத்து இரத்த வெள்ளத்தில் விழுந்து கிடந்த தங்கள் அன்புக்குரியவர்களை தமது மார்புகளில் சுமந்து சென்றவர்கள் பெண்கள்.

அமெரிக்க ஆதரவு ஷாவின் படைகளினால் தங்களது அன்புக்குரியவர்கள் சுட்டுவீழ்த்தப்பட்ட பின் அவர்களைச் சுமந்து சென்றவர்களும் பெண்கள்தான்.

ஷைத்தானியப் படைகளோடு யுத்தமுனையில் வீரதீரப் போராட்டம் நடத்தியவர்கள் பெண்கள்.

இந்த ஷைத்தானிய படைகள் தான், சமத்துவமற்ற மனநிலையையும் அவளிடையே இதுவரையில் செம்மையாக அமைந்திருந்த விசேட மனோதத்துவ கல்வித்தன்மைகளில் சமத்துவமற்ற நிலையை உருவாக்குவதற்கும் பொறுப்பாக இருந்தவை.

உள்ளார்ந்த வெளிப்படையான சக்திகளுக்கு எதிரான இந்தப்போராட்டத்தில் பெண்கள் மகத்தான வெற்றி கண்டார்கள். இதன்

முடிவு அவர்களுடைய மடிகள் கம்பீரமான பெறுமானங்கள் குடிகொள்ளும் பரிசுத்தமான உயர்வான மேடைகள் ஆயின.

இதற்கு மாறாக கடந்த காலத்தை சற்று திரும்பிப் பார்த்தால் அங்கே பெண்களுடைய வெட்கக்கேடான வாழ்க்கை முறையைக் காணலாம். அங்கே அவமரியாதை எனும் புதைகுழிக்குள் அவள் இழுக்கப்பட்டாள்.

அழிவை நோக்கி சென்றுகொண்டிருக்கின்ற குறிப்பாக தற்போதைய ஏகாதிபத்திய சமூகங்களில் பெண்களின் வரலாற்றை சற்று உற்று நோக்குங்கள். அங்கே வரலாறு நெடுகிலும் பெண் என்பவள் காமத்தின் காட்சிப் பொருளாக மதிக்கப்படுவதை நீங்கள் காணலாம்.

இதன் விழிப்புணர்வில் அறிவு ரீதியான அடிமைத்தனத்தை நாம் காணுவது ஒன்றும் ஆச்சரியத்துக்கு உரியதல்ல.

ஏனெனில் மேலைத்தேய ஏகாதிபத்தியம் தனது மிருகத்தனமான இலாபமீட்டும் நோக்கிற்கும் பதவிகளைக் கைப்பற்றிக் கொள்ளும் இலட்சியத்திற்கும் ஃபர்தா அழிப்பை மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதமாகக் கையாளுகின்றது. பெண்களை தரம் குறைப்பதிலும் அவமானப்படுத்துவதிலும் கூட ஃபர்தா ஒழிப்பை சக்திமிக்க ஆயுதமாக ஏகாதிபத்தியம் பயன்படுத்துகின்றது.

இதற்குக் காரணம் மக்களின் சீர்கேட்டுக்குரிய ஒரு சாதனம் அல்லது வீழ்ச்சி அல்லது அழிவுக்குரிய ஒரு காரணி ஒரு பெண்ணில்தான் மறைத்துவைக்கப்பட்டுள்ளது என்பதை ஏகாதிபத்தியம் முழுமையாக உணர்ந்துள்ளது.

இதனால்தான் பெண்களின் இயல்பான திறமைகளைப் பலவீனப்படுத்தும் அல்லது அவர்களின் உருவத்தை சிதைத்துவிடும் தமது நோக்கத்தின் முதல்படியாக ஃபர்தா ஒழிப்பை அது அமுல்செய்ய முனைகின்றது.

பெண்களின் பௌதீக அமைப்பைக் காட்சிப்பொருள் ஆக்குவதன் மூலம் மேலைத்தேய ஏகாதிபத்தியம் அவர்களுடைய இஸ்லாமிய பண்புகளை அப்புறப்படுத்தி அவர்களை நிர்மூலமாக்குவதோடு முஸ்லிம்

ஆண்களையும் பெண்களையும் கலாசார, பொருளாதார, அரசியல் அடிமைத்தனத்தை நோக்கி இழுத்துச் செல்லவும் முனைகிறது.

இப்போது நாம் முஸ்லிம் நாடுகளில் குறிப்பாக ஈரானில், ஃபர்தா ஒழிப்பினால் ஏற்பட்ட அபசகுனமான காரணிகளையும் இந்த தீய வடிவங்களை எதிரிகள் எப்படி ஆரம்பித்தார்கள் என்பதையும் நோக்குவோம்.

## அகநிலைப் பண்பை அகற்றல்

முஸ்லிம்களின் அகநிலைப் பண்பை அகற்றல் மிக நீண்டதொரு வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது. சிலுவை யுத்தகாலம் முதல் அது தொடர்கிறது. இந்தக் காலப்பகுதியில் முஸ்லிம்களிடம் இருந்து அவர்கள் பெருமளவு விஞ்ஞான கலை நுட்பங்களைக் கற்றுக் கொண்டனர். பின்பு மிகக் குறுகிய காலப்பகுதியில் மேலைத்தேயவாதிகள் முஸ்லிம்களிடமிருந்து கற்றுக்கொண்ட இந்த விஞ்ஞான கலைநுட்பங்களை மேலும் விருத்தி செய்து தமது சொந்த தொழில்நுட்பங்களையும் உபகரணங்களையும் உருவாக்குவதில் வெற்றி கண்டனர்.

இவற்றை உருவாக்கிய பின் எமக்கு மிகவும் விசுவாசமாக இருக்கவேண்டிய அவர்கள், மிகவும் வெட்கக்கேடான முறையில் எமக்கு நன்றிகெட்டவர்களாக நடந்துக்கொண்டது மட்டுமன்றி எம்மிடம் கற்றுக்கொண்டவைகள் மூலம் உருவாக்கப்பட்டவற்றைக் கொண்டே எம்மை தாக்கவும் செய்தனர்.

உலகைச் சுற்றிவந்த மனிதனது பிரயாண அனுபவங்கள் அவனுடைய வெளிப்பார்வையில் அவனை மேலும் முதிர்ச்சி அடையச் செய்தன. உலகைச் சுற்றிவந்த பண்டைய மனிதன் வியாபாரத்தில் ஆவல்மிக்கவனாகக் காணப்பட்டதால் சொத்துரிமையிலும் செல்வத்திலும் அவன் கொண்டிருந்த நாட்டம் காரணமாக எவ்வளவு செல்வம் கிடைத்தபோதிலும் அவனை அது திருப்திப்படுத்தவில்லை. ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு செய்த பிரயாணம் மனிதனின் மனோ நிலையில் முதிர்ச்சியை ஏற்படுத்தியது. மூலவார்ப்பு எனும் கண்ணாடியில் முடிந்தவரையும் எல்லா பிரதி பிம்பங்களையும் அவனால் காண முடிந்தது.

நேற்றைய பிரயாணி அடுத்தநாள் பேராசையுள்ள வியாபாரியாக மாறினான். அவனுடைய துளைத்துச் செல்லும் பார்வையும் நீண்ட

அனுபவமும் புவியின் கனமான மேற்பரப்பில் இருந்து அவனை அதன் ஆழத்துக்கு இழுத்துச் சென்றன. இதன் காரணமான அவன் கைபடாத முத்தையும் எண்ணெய் வளத்தையும் தங்கத்தையும் வெள்ளியையும் செம்பையும் கண்டுகொண்டான்.

அவர்கள் எப்படிப்பட்ட கண்களினால் அல்லது எப்படிப்பட்ட கருவிகளினால் இவற்றைக் கண்டுகொண்டார்கள்? பேராசை எனும் கண்களினாலும் பேராவல் எனும் கருவிகளினாலும் இன்னும் வேண்டும் என்ற திருப்தி செய்ய முடியாத அவனது ஆசைகளினாலுமே அவன் இவற்றை அடைய முடிந்தது.

வாசனைத் திரவியங்களையும் துணிமணிகளையும் விற்பதோடும் அல்லது அரசர்களினதும் இளவரசர்களினதும் முடிக்குரிய சின்னங்களில் இருந்து தங்கத்தையும் வைரத்தையும் கொள்ளை அடிப்பதோடும் அவர்கள் நிறுத்திக்கொள்ளவில்லை. அந்த மண்ணில் உள்ள மறைவான பொக்கிஷங்கள் அனைத்தையும் அப்புறப்படுத்துவதிலும் அவர்களது கவனம் திரும்பியது. இந்த மறைவான பொக்கிஷங்களை வாங்குவதற்கு மாபெரும் பணக்காரர்களும் அவர்களுக்குத் தேவைப்பட்டனர். இத்தகைய கொள்ளைகளினாலும் ஊடுருவல்களினாலும்தான் இந்த வியாபாரிகளுக்கு தமது அறுவருப்பான திட்டங்களில் வெற்றிகாண முடிந்தது. இந்த நிலையில் முற்றிலும் எதிர்பாராத தாக்குதலுக்கும் அவர்கள் முகம்கொடுக்க வேண்டியிருந்தது.

இந்தத் தடைகளை முறியடித்துத் தங்களது இலக்கை எவ்வாறு அடைந்துகொள்வது? என்று தொடர்ச்சியாக இவர்கள் யோசித்தனர். கடைசியில் அவர்களிடையே குடிகொண்டிருந்த திருடனுக்குரிய விசேட திறமைகளும் ஆக்கிரமிப்பாளன், கொள்ளைக்காரன் ஆகியோருக்குரிய தன்மைகளும் அதனோடு ஒன்றி இயற்கை சுபாவங்களும் விவேகமும் அவர்களுக்கு தங்கள் இலக்கை அடைந்து கொள்வதில் ஆதரவளித்தன.

கீழைத்தேய மக்கள் மிகவும் விலைமதிப்புக்குரிய ஒரு பொருளை ஆஸ்தியாகக் கொண்டுள்ளனர் என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டனர்.

மேற்குலகம் கொள்ளையடிக்க நினைத்த எல்லாச் செல்வங்களையும் பார்க்க பெறுமதிமிக்க ஓர் ஆஸ்தி அது. அந்த ஆஸ்தி கனிப்பொருள்களைப் போல இயற்கையால் உருவாக்கப்பட்டதும் அல்ல. பூலோக அளவீடுகளால்

தயாரிக்கப்பட்டதும் அல்ல. அந்த பெறுமதிமிக்க ஆஸ்தி அவர்களது கண்களுக்கு புலப்படக்கூடியதோ அல்லது அவர்களது கைகளால் தொட்டு உணரக்கூடியதோ அல்ல.

இந்த பெறுமதிமிக்க வைரம் கோடிக்கணக்கான மக்களால் பல்லாயிரம் ஆண்டுகால நம்பிக்கையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. அவர்களுடைய விசனங்களாலும் சந்தோஷத்தாலும் கலாசாரத்தாலும் மார்க்கத்தாலும் பண்டைய வரலாறுகளினாலும் உருவாக்கப்பட்டது. பெறுமதிமிக்க நேர்த்தியான மதிப்பிட முடியாத இந்த வைரம்தான் அகநிலைப் பண்பு என்பது.

விஞ்ஞானத்தாலும் தொழில் நுட்பத்தாலும் மனிதனுக்குப் பல அற்புதங்களை நிகழ்த்த முடியும். அணுவைக்கூட அவனால் பிளக்க முடியும். உருக்கைக் கூட அவனால் உருகச் செய்ய முடியும். சமுத்திரங்களின் ஆழத்தின் அடிப்பகுதியைக்கூட அவனால் அடைய முடியும். நட்சத்திரங்களையும் கிரகங்களையும் கண்டுபிடித்து அங்கே தரையிறங்கக்கூட அவனால் முடியும். பெற்றோலியத்தைக் கொண்டு துணிகளையும் இனிப்பு வகைகளையும் கூட அவனால் உருவாக்க முடியும். ஆனால் "அகநிலையைப் பண்பை" அடைந்து கொள்ளும் வழியை விஞ்ஞானத்தாலும் தொழில் நுட்பத்தாலும் கண்டுகொள்ள மனிதனால் முடியாது.

இந்த அகநிலைப் பண்பை அழித்து ஒழித்து நிர்மூலமாக்குவதில் வெற்றி காணாதவரை கீழைத்தேய நாடுகளில் கொதிப்பான பூமியில் காலடி எடுத்து வைக்கவோ அங்குள்ள மறைவான செல்வங்களைச் சூறையாடவோ முடியாது என்பது மேற்குலகுக்கு நன்றாகத் தெரியும்.

இந்த "அகநிலையைப் பண்பை" முறியடித்து நாசமாக்க மேற்குலகால் எவ்வாறு முடிந்தது? அதன் மக்கள்தான் சிந்தனை செய்து சிந்தனை செய்து திட்டங்களைத் தீட்டினர். முதலாவதாக "அகநிலைப் பண்பை" வேருடன் களைந்து எறிய வேண்டும் என்ற அவர்களது பொதுவான இலக்கைக் குறித்துக் கொண்டனர். கீழைத்தேசத்தின் எதிர்தாக்குதலினதும் சக்தியினதும் பின்னணியில் இருந்த இரகசியமே இந்த அகநிலைப் பண்புதான்.

இந்த இலக்கை அடைந்து கொள்ளும் முயற்சியில் பின்வரும் இரண்டு முறைகளை அவர்கள் கையாண்டனர்.

## 1. கீழைத்தேச அகநிலைப் பண்பைத் தாழ்த்துதல்

உலக வரலாற்றில் எல்லா கொடுங்கோல் ஆட்சியாளர்களாலும் சர்வாதிகாரிகளாலும் அமுல் செய்யப்பட்ட முறைதான் இந்த முதலாவது முறை. ஃபிர்அவ்னுடைய வரலாற்றை (ஓரளவுக்கு) அல்குர்ஆன் பின்வரும் வசனங்களின் மூலம் கூறுகிறது.

*மேலும் ஃபிர்அவ்ன் தன் சமூகத்தாரிடம் பறைசாற்றினான்: "என்னுடைய சமூகத்தவரே! இந்த மிஸ்று (எகிப்தின்) அரசாங்கம், என்னுடையதல்லவா? என் (மாளிகை) அடியில் ஓடிக்கொண்டிருக்கும் (நீல நதியின்) இக்கால்வாய்களும் (என் ஆட்சிக்கு உட்பட்டவை என்பதைப்) பார்க்கவில்லையா? அல்லது, இழிவானவரும் தெளிவாகப் பேச இயலாதவருமாகிய (மூஸா) இவரைவிட நான் மேலானவன் இல்லையா?"*

*(அல்குர்ஆன் 43:51-52)*

அல்குர்ஆன் அந்தக் கதையை இவ்வாறு முடிக்கிறது.

*(இவ்வாறாக) அவன் தன் சமூகத்தாரை (அவர்களுடைய அறிவை) தாழ்த்தி மதித்தான்; அவனுக்கு அவர்களும் கீழ்படிந்து விட்டார்கள்...*

*(அல்குர்ஆன் 43:54)*

ஆக மேற்குலகும் கீழைத்தேய நாடுகளின் அகநிலைப் பண்பை தாழ்வாக மதிக்கும் முறையை அமுல்செய்து மேலைத்தேயத்தவர்கள் முக்கியமானவர்கள் சக்தி மிக்கவர்கள் செல்வந்தவர்கள் என உலகுக்கு காட்டியது.

## 2. தெளிவான விளக்கங்களை அழித்தல்

மேற்குலக நாடுகளினால் கடைப்பிடிக்கப்பட்ட இரண்டாவது முறை அகநிலைப் பண்பு பற்றிய தெளிவான விளக்கங்களை அழித்து விடுதலாகும். வேறு விதமாகக் கூறுவதாயின், அகநிலைப் பண்பு பற்றி உள்ளார்ந்த நிலையிலோ அல்லது வெளிப்படையாகவோ தெரியக்கூடிய

அனைத்தையும் அழித்து விடுவதாகும். அல்லது அவற்றின் தன்மைகளை அழித்து விடுதலாகும். ஒன்றின் பருமனுக்கு முடிவு கட்டும் வகையில் அதன் வடிவத்தை அழித்துவிடுவது. அதாவது உள் பகுதியை அழித்து விடுவதற்காக வெளிப்பகுதியை நிர்மூலமாக்குவது என்று ஒரு பிரபலமான கூற்று கூறுகிறது. இதற்குப் பிறகு மேற்குலகம் இன்னும் சில நுட்பமான முறைகளையும் கையாண்டது.

## முன்னேற்றமும் பின்னடைவும்

ஆரம்பத்தில் மேற்குலகம் மனித வர்க்கத்தில் உள்ள பிரத்தியேகமான ஒரு மனோதத்துவ நிலையை வெளிப்படுத்தியது. அல்குர்ஆனிலும் இதே போன்று ஒரு நிலை கூறப்பட்டுள்ளது.

"மனிதன் தன்னுடைய முன்னேற்றத்தை வெளிக்காட்டவே ஆசைப்படுகிறான்" என்று கருத்துப்பட குர்ஆனில் கூறப்பட்டுள்ளது.

மனிதனுடைய முன்னேற்றம் என்பது என்ன? பழமை மீதான அன்பை வெறுத்து புதியவற்றையும் புதுமையானவற்றையும் ஆதரிப்பதையும் அவற்றுக்காக பரிந்துரைப்பதையும் அல்குர்ஆன் வற்புறுத்திக் கூறுகின்றது. சுத்தமான புதிய பழங்களைப் புசிக்க வேண்டும் என்ற ஆசையும் புதிய புதிய அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும், புதிய பொருள்களை அனுபவிக்க வேண்டும் என்ற ஆசைகளும் இதற்கு முன்பே காணப்பட்ட அனுபவங்கள்தான்.

இப்போது மேற்குலகம் கீழைத்தேய நாடுகளுக்கு வந்து அதன் மக்களைப் பார்த்துக் கூறுகிறது: இப்போது உங்களிடம் இருப்பவை எல்லாமே பழையன, இறந்த காலத்துக்குரியன, காலம் கடந்தன, அவை நாகரிக வளர்ச்சி குன்றிய காலத்தில் தயாரிக்கப்பட்டவை, எங்களிடம் இருப்பவை எல்லாமே புதியவை, தூய்மையானவை, சுத்தமானவை, நவீனமானவை. உங்களிடம் கலாசாரம், பழக்க வழக்கம், சட்டங்கள், உடைகள், கட்டிடக் கலை, கலை, இலக்கியம், மொழி அல்லது வேறு எதுவாக இருந்தாலும் சரி உங்களிடம் இருப்பவை எல்லாமே காலம் கடந்தவை. காலாவதியானவை. எம்மிடம் தூய நவீன பொருட்கள் தான் உள்ளன. வாருங்கள் வந்து இந்த நவீனத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கீழைத்தேய மக்களுக்கு மேற்குலகம் அழைப்பு விடுக்கின்றது.